ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2317/63 - 2023 පෙබරවාරි මස 01 වැනි බදාදා - 2023.02.01
*2317/63 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### மாண்புமிகு சனாதிபதியின் பிரகடனம்

(முத்திரை)

**ரணில் விக்கிரமசிங்க.**

நலம் பெறுக!

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், அரசின் பிரதானியும், நிறைவேற்றுத்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், முப்படைகளின் கட்டளைத் தளபதியுமான ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், வாழ்த்துக்களைக் கூறி இவ்வாறாக அறியத்தருகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளின் அனைத்துவித பதவிகளை வகிப்போருக்கும் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை நினைவூட்டும் வகையில் பதக்கமொன்றை வழங்குவதற்கு நான் உத்தேசித்துள்ளதனாலும்,

இதன் முதற்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளின் இப்பதக்கத்தினைப் பெறுவதற்குரிய தகைமைகளைக்கொண்ட அனைத்து விதமான பதவி வகிப்போருக்கும், அவர்களால் பெரிதும் போற்றப்படும் புதிய பதக்கமொன்றைத் தாபித்து, உருவாக்கி, வடிவமைப்பதில் நான் மகிழ்ச்சியும் விருப்பமும் கொண்டுள்ளதனாலும்,

இதன் முதற்கொண்டு இப்பதக்கத்தை நிர்வகிப்பதற்காக இதன்பின்னர் மீற முடியாதவாறு பேணப்பட வேண்டிய பின்வரும் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் நான் இவ்வாறு வகுத்து விதித்தமைத்து நிறுவுகின்றேன்.

1A - G 38937 — 11 (2023/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாவதாக :**

பெயர் சூட்டலும் அறிமுகமும் - இப் பதக்கம் '**75 ஆவது சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கம்**' எனப் பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**இரண்டாவதாக :**

விபரம் - வட்ட வடிவம் கொண்டதாய் குப்ரோ நிக்கல் உலோகத்தால் ஆக்கப்பட வேண்டிய இப் பதக்கத்தின் முகப்புப் பக்கத்தில் இலங்கை தரைப்படையைக் குறிக்கும் மேல்நோக்கியவாறு ஒன்றோடொன்று குறுக்காக அமைந்திருக்குமாறு செதுக்கப்பட்ட இரண்டு வாள்கள், இலங்கை கடற்படையைக் குறிக்கும் ஒரு நங்கூரம் அதனைச் சுற்றி ஒரு சங்கிலியால் சுற்றப்பட்டிருக்கும் நிலையில் இருந்து உயரம் வரை அதற்கு மேல் இலங்கை விமானப்படையைக் குறிக்கும் தலை இடதுபுறம் திரும்பிய ஒரு கழுகும், அதற்கு மேலாக அமைந்துள்ள இலங்கை குடியரசின் அரச சின்னம் உயர்த்தப்பட்ட சிற்பங்களுடன் செதுக்கப்பட்டு உருவாக்கப்பட்ட சின்னம் மூலம், இலங்கைத் தீவைப் பாதுகாப்பதில் தரைப்படை, கடற்படை, விமானப்படை செயற்படுகின்றன என்பது எடுத்துக் காட்டப்படுகின்றது. 75 ஆண்டு தன்னாட்சியை அடையாளப்படுத்தும் வகையில் பதக்கத்தின் நடுவில் 75 என்ற இலக்கமும் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், பதக்கத்தின் எதிர்ப்பக்கத்தில் இலங்கைக் குடியரசின் அரச சின்னமும், அதற்குக் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் '**75 ஆவது சுதந்திர நினைவு**' என்ற பதமும், குடியரசின் அரச சின்னத்துக்கு மேலாக 1948 – 2023 என்பது உயர நோக்கிக் காட்டப்பட வேண்டும் எனவும் விதிக்கப்படுகின்றது.

**மூன்றாவதாக :**

பட்டி – பட்டியில் 5 செ.மீ. நீளமும், 3 செ.மீ. அகலமும் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுடன், அதன் நடுவில் பச்சை, செம்மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களில் 2 மி.மீ. அகலம் கொண்ட மூன்று கோடுகளையும், அதன் இரு பக்கங்களிலும் 1.0 மி.மீ. அகலம் கொண்ட இரண்டு மஞ்சள் நிறத்திலான இரு கோடுகளையும், இரு முனைகளிலிருந்தும் நடுப்பகுதி வரை விரிந்து செல்லும் 1.5 மி.மீ. கொண்ட நீலம், இளநீலம், செம்மஞ்சள் நிறங்களிலான மூன்று கோடுகளையும், செம்மஞ்சள் நிறத்துக்கும் மஞ்சள் நிறத்துக்கும் நடுவில் 6.5 மி.மீ. கொண்ட வைர வெள்ளை நிற இரு கோடுகளையும் கொண்டதாக இருக்கும். இந்த பட்டியில் உள்ள நீலம், இளநீலம் மற்றும் செம்மஞ்சள் நிறங்களினால் முப்படைகளும் எடுத்துக் காட்டப்படுவதுடன், வைர வெள்ளை நிறத்தினால் 75 ஆவது சுதந்திரதின நினைவும், மஞ்சள் நிறக் கோட்டினால் மெத்தா, கருணா, முதித்தா, உபேக்ஷா என்ற நால்வகை பிரம்ம விவரணங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றது. மேலும், இந்த பட்டியில் சிவப்பு, செம்மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களினால் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்கள் எடுத்துக் காட்டப்படுவதுடன், இந்த நிறங்களையுடைய பட்டிஒன்றில் தொங்கவிடப்பட்டவாறு இப் பதக்கத்தை மார்பின் இடது பக்கத்தில் அணிய வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**நான்காவதாக :**

தகைமை - இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய படைகளின் நிரந்தர அல்லது தொண்டர் படைகளில் முனைப்புடனான சேவைக்கு ஈடுபட்டிருந்தவர்களும் (அடிப்படைப் பயிற்சிப் பாடநெறிகளில் கலந்து கொண்டுள்ளோர் மற்றும் இராணுவ முனைப்புடனான சேவைக்கு அழைக்கப்பட்டுள்ள தேசிய பயிலிளவல் படையணியின் உத்தியோகத்தர்கள் உட்பட) இங்கு இதனகத்துப் பின்னர் வகுத்துக் குறிப்பிட்டுக் காட்டும் ஒழுங்குவிதிகளின்படியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பிரகாரம் இப் பதக்கத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையோர் என தரைப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி ஆகியோரினால் பரிந்துரை செய்யப்பட்டவர்களுமான சகல நபர்களுக்கும் இப் பதக்கம் வழங்கப்படுதல் வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**ஐந்தாவதாக :**

பதிவு - இந்த பதக்கம் வழங்கப்படுகின்ற அனைவரினதும் பெயர்கள், உரிய சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும் எனவும், அத்தகைய பதிவேடுகள் அந்தந்த கட்டளையிடும் தளபதிகளின் பணிப்பின் கீழ் பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.

**ஆறாவதாக :**

அணியும் ஒழுங்குவரிசை - நன்மதிப்புச் சின்னங்கள் பதக்கங்கள் ஆகியவற்றை அணிய வேண்டிய ஒழுங்குவரிசையைக் காட்டும் உத்தியோகபூர்வ ஏட்டில் சிறப்பான சாதனைகளை / நாட்களை கொண்டாடுவதற்காக வழங்கப்பட்ட 50 ஆம் சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கத்திற்குப் பின்னர், **75 ஆம் சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கம்** அணியப்படல் வேண்டுமென விதிக்கப்படுகின்றது.

**ஏழாவதாக :**

*சிற்றுருவ அமைப்புகள் - பதக்கங்கள் வழங்கப் பெற்றவர்கள் சில சந்தர்ப்பங்களில் அணிந்து கொள்ளக்கூடியதும், சிற்றுருவ நன்மதிப்புச் சின்னம் என அழைக்கப்படுவதுமான சிற்றுருவ சின்னத்தின் அளவு அண்ணளவாக, வழங்கப்பட்ட பதக்கத்தின் அரைவாசி அளவினதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அச்சிற்றுருவ நன்மதிப்புச் சின்னத்தில் முத்திரை பொறிக்கப்பட்ட மாதிரியொன்று, தரைப்படை, கடற்படை, விமானப்படை தலைமையகங்களில் வைக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டுமெனவும் விதிக்கப்படுகின்றது.*

**எட்டாவதாக :**

*பறிமுதல் செய்தலும் மீளளித்தலும் - இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளின் கீழ் எவரேனும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்கி நிராகரிப்பதற்கான அதிகாரம் மற்றும் அவ்வாறு வறிதாக்கப்படும் பதக்கமொன்றை மீண்டும் செல்லுபடியாகும் விதத்தில் அளிப்பதற்கான அதிகாரம் சனாதிபதி என்ற வகையில் எனக்கு உண்டு என விதிக்கப்படுகின்றது. மேலும் அவ்வாறு அளிக்கப்பட்ட பதக்கமொன்றை வறிதாக்குதல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக உரிய சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலட்சினையின் கீழ், இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு பெப்புருவரி மாதம் முதலாம் திகதி சனாதிபதி அலுவலகத்தில் வழங்கப்பட்டது.*

*மாண்புமிகு சனாதிபதியின் ஆணைப்படி,*

**ஈ எம் எஸ் பி ஏக்கநாயக்க,**
*சனாதிபதியின் செயலாளர்.*

**75 ஆவது சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கம்**

*சனாதிபதி ஆணைச்சீட்டில் விதிக்கப்பெற்ற ஏற்பாடுகளை விளக்கமான வகையில் 75 ஆவது சுதந்திரதின நினைவுப் பதக்கம் வழங்குதல், வறிதாக்குதல், மீளளித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற விடயங்கள் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு சனாதிபதியவர்களால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மாண்புமிகு சனாதிபதியின் ஆணைப்படி,*

**ஈ எம் எஸ் பி ஏக்கநாயக்க,**
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2023, பெப்புருவரி 01.*

**75 ஆவது சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கம் தொடர்பான ஒழுங்குவிதிகள்**

1. *இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு பெப்புருவரி மாதம் முதலாம் திகதிக்கு முனைப்புடனான சேவையில் ஈடுபட்டிருந்தவர்களும், (அடிப்படைப் பயிற்சிப் பாடநெறிகளில் கலந்து கொண்டுள்ளோர் மற்றும் இராணுவ முனைப்புடனான சேவைக்கு அழைக்கப்பட்டுள்ள தேசிய பயிலிளவல் படையணியின் உத்தியோகத்தர்கள் உட்பட) இப் பதக்கத்தை பெறுவதற்குத் தகுதியானவர்கள் என தரைப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி ஆகியோரால் பரிந்துரை செய்யப்பட்டவர்களுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை அல்லது விமானப்படை ஆகிய படைகளின் நிரந்தர அல்லது தொண்டர் படைகளைச் சேர்ந்த சகல வரிசைப் பதவியினரும் இப்பதக்கத்தைப் பெறுவதற்கு தகைமையுடையோர் ஆவார்கள்.*

2. *பின்வரும் நபர்கள் பதக்கம் பெறத் தகுதியற்றவராவார்கள்.*

   *(அ) 2023 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதியன்று வரை விடுமுறை பெற்றுக்கொள்ளாது சேவைக்கு சமுகமளிக்காதவர்கள் அல்லது சேவையிலிருந்து தப்பியோடிய நபர்கள்.*

   *(ஆ) 2023 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதியன்று வரை கடமையைத் தவிர்க்க உடல் நலம் குன்றியது போல் பாசாங்கு செய்தவர்களும், தாங்களே தங்களுக்கு உடலூறு ஏற்படுத்திக் கொண்டவர்களும், வேண்டுமென்றே கடமைகளைத் தட்டிக்கழித்தவர்களும்.*

3. மரணத்தின் பின்னரும் இவ் அளிப்பு, அளிப்பு பெறுவபரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது நெருங்கிய உறவினரால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட முடியும்.

4. ஒவ்வொரு பரிந்துரையுடனும், பரிந்துரைக்கப்படுபவரின் இலக்கம், பதவி வரிசை மற்றும் முழுப்பெயர் ஆகிய விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5. இந்த பதக்கம் வழங்கப்பட்டோரின் பெயர்கள், குறிப்பிட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு பதக்கம் பெற்ற அனைவரதும் பெயர்ப்பட்டியல்கள் ஏற்புடைய கட்டளையிடும் தளபதிகளின் பணிப்பின் கீழ் பேணப்படல் வேண்டும்.

6. பதக்கம் அளிக்கப்பட்டிருந்த போது தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய படைகளிலிருந்து அபகீர்த்தியுடன் வெளியேற்றப்படும், அவமானத்துடன் விலக்கப்படும், அகற்றப்படும் அதிகாரவாணையிலிருந்து விலகுவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு பணிக்கப்படும் ஒவ்வொரு நபருக்கும் மாண்புமிகு சனாதிபதியவர்களால் வேறுவிதமான உத்தரவு பிறப்பிக்கப்படாத வரை அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

7. எவரேனும் ஒருவருக்கு இப் பதக்கம் அளிக்கப்பட்டிருந்த போது, அரச துரோகம், அரச பிரிவினை, கலகங்கள், கோழைத்தனம், இயற்கைக்கு மாறுபட்ட விதத்தில் அவமானமுள்ள நடத்தை போன்ற ஒரு குற்றத்து குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அல்லது ஒழுக்கக்கேடான சம்பவம் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டிருப்பின் அல்லது தரைப்படை, கடற்படை அல்லது விமானப்படைச் சட்டத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கையில் சிவில் அதிகாரிகளால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படின், அந்த நபருக்கு மாண்புமிகு சனாதிபதியவர்களால் வேறுவிதமாக கட்டளை பிறப்பிக்கப்பட்டாலன்றி, அவருக்கு அளிக்கப்பட்ட பதக்கம் இழக்கப்படுதல் வேண்டும்.

8. எவரேனுமொருவரால் இழக்கப்பட்ட பதக்கத்தை தனது தற்றுணிபுக்கு அமைய மீளளிப்பதற்கு மாண்புமிகு சனாதிபதியவர்களுக்கு முடியும்.

9. இழக்கச் செய்தல் அல்லது மீளளித்தல் இடம்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அது தொடர்பான அறிவித்தலொன்று உரிய சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படுதல் வேண்டும்.

10. எவரேனுமோர் உத்தியோகத்தர் அல்லது தரைப்படை வீரர், கடற்படை வீரர் அல்லது விமானப்படை வீரர், தனது தொலைந்த பதக்கத்துக்குப் பதிலாக வேறொரு பதக்கத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பாராயின், அவ் உத்தியோகத்தர், தரைப்படை வீரர், கடற்படை வீரர் அல்லது விமானப்படை வீரரால் அப் பதக்கம் தொலைந்து போன விதம் பற்றிய வாக்குமூலமொன்றை கட்டளையிடும் அதிகாரியிடம் / உயர் அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் அந்த வாக்குமூலத்தை உரியமுறையில் மாண்புமிகு சனாதிபதியவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும். பதக்கம் தொலைந்தமை தொடர்பில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் திருப்திகரமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டால், தொலைந்த பதக்கத்திற்குப் பதிலாக வேறொரு பதக்கத்தை உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

11. இந்த ஒழுங்குவிதிகளில்:

(அ) 'சேவை' எனும் பதம் - இலங்கை தரைப்படை,
இலங்கை கடற்படை,
இலங்கை விமானப்படை
என்பதையும்,

(ஆ) 'கட்டளையிடும் தளபதி' எனும் பதம் - தரைப்படைத் தளபதி,
கடற்படைத் தளபதி,
விமானப்படைத் தளபதி
என்பதையும்,

(இ) 'தரைப்படை' எனும் பதம் - இலங்கைத் தரைப்படை,
'கடற்படை' எனும் பதம் இலங்கை கடற்படை மற்றும்
'விமானப்படை' எனும் பதம் இலங்கை விமானப்படை
என்பதையும்

குறிக்கும் என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

**75 ஆவது சுதந்திர ஆண்டு நினைவுப் பதக்கம்**




EOG 02-0267